## தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

**ந.க.எண்: 036927/ எம்/இ2/2019, நாள்: 2.08.2019**

பொருள்: பள்ளிக்கல்வி– சுதந்திர தின விழா 2019– வருகின்ற 15.08.2019 (வியாழக்கிழமை) அன்று சுதந்திர இந்தியாவின் 73வது சுதந்திர தினவிழாவினை அனைத்து அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் சிறப்பாக கொண்டாடுதல்– சார்பு.

பார்வை: Letter from Deputy Secretary to Govt, School Education Department, Secretariat, Chennai- 9, Letter R.C.No. 17377 / GL 1(2) / 2019,Dt: 15.07.2019

**************

நமது சுதந்திர இந்தியாவின் 2019ஆம் ஆண்டின் சுதந்திர தினவிழா வருகின்ற 15.08.2019 அன்று பள்ளிக்கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து முதன்மைக்கல்வி அலுவலகங்கள் , மாவட்டக்கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து வகை பள்ளிகளிலும் மிகவும் சிறப்பாக கொண்டாடுவது சார்ந்து கீழ்க்காணும் அறிவுரைகள் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

### அனைத்து வகை பள்ளிகளில் சுதந்திர தினவிழா கொண்டாடுதல்.

1. நமது சுதந்திர இந்தியாவின் எதிர்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது. மேலும் இன்றைய மாணவர்கள் நாளைய இந்தியப் பெருநாட்டின் இளைஞர்களாய் வீற்றிருந்து வழி நடத்திச் செல்லும் கடமையும், பொறுப்பும் உள்ளதால், வருங்கால சிறந்த இந்திய குடிமக்களை உருவாக்கும் கூடங்களாக செயல்படும் நம் பள்ளிகளில், நமது இந்தியாவின் சுதந்திர போராட்ட வரலாற்றையும், சுதந்திர போராட்ட வீரர்கள் செய்த தியாகங்களையும் , பட்ட இன்னல்களையும் தேசியக்கொடி வரலாற்றையும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வண்ணம்ஆக்கப் பூர்வமாகவும் , மகிழ்ச்சியும், எழுச்சியும் மிக்க விழாவாகவும் கொண்டாடப்பட வேண்டும்.
2. முன்னதாக பள்ளி வளாகத்தை வண்ணக் காகிதங்களாலும் வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்படுதல் வேண்டும்.
3. 15.08.2019 அன்றைய தினம் காலை தேசியக்கொடியினை பள்ளி வளாகத்தில் ஏற்றி மிகச் சிறப்பாக மேற்கூறப்பட்டவாறும் , நாட்டுப்பற்று , பண்பாடு , கலாச்சாரம் ஆகியவற்றை விளக்கும் வகையிலும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுதல் வேண்டும்.
4. சுதந்திர போராட்ட வரலாற்றினை விளக்கும் வகையில் கண்காட்சி , நாடகம் ஆகியவை நடத்தப்பட வேண்டும்.
5. பள்ளிகளில் நாட்டுப்பற்று, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை விளக்கும் வண்ணம் பேச்சுப்போட்டி ,கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் விளையாட்டுப்போட்டி ஆகியவைகள் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு சுதந்திர தினவிழா அன்று பரிசுகள் வழங்கப்படல் வேண்டும்.
6. நமது சுதந்திர தினவிழா கொண்டாடத்தினை நினைவு கூறும் வகையில் பள்ளிகளில் மரங்களை நடுவதற்கு இடங்களை தேர்வு செய்து, போதிய இடவசதி

இருப்பின் மரக்கன்றுகளை மாணவர்களைக் கொண்டு நட செய்து , பராமரிக்க செய்யலாம். போதிய இடவசதி இல்லாமலிருப்பின் மாணவர்களிடையே மரத்தின் அவசியத்தையும் , அதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் நன்மைகளையும் விளக்கிக்கூறி மாணாக்கர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். தேவையான மரக்கன்றுகளை வனத்துறையை தொடர்பு கொண்டு இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. தேசியக்கொடியின் மாண்பையும், தேசியக்கீதத்தின் மதிப்பையும் மாணாக்கர்களுக்கு எடுத்துரைத்து அதனை போற்றி பாதுகாக்கும் பண்பினை ஊட்ட வேண்டும்.
8. மேலும், பள்ளி வளாகத்தில் அக்கறையுள்ள முன்னாள்/ இன்னாள் மாணவர்கள் , பெற்றோர்கள் , அனைத்து ஆசிரியர்கள் , கிராமக்கல்விக்குழு உறுப்பினிர்கள் , பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர்கள் , அன்னையர் குழுக்கள், பள்ளி புரவலர்கள் , சுதந்திர தின போராட்ட வீரர்கள் அனைத்து சமுதாய பிரிவினர்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை அழைத்து விழாவில் பங்கு பெறச் செய்ய வேண்டும்.
9. பள்ளித்தலைமையாசிரியர்கள் சுதந்திர தினவிழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து , குழு அமைத்து மாணவர்களிடையே நாட்டுப்பற்றையும் , தேசிய ஒருமைப்பாட்டையும் ஊக்குவிக்கும் வண்ணம் சிறப்பாக கொண்டாடி சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கு அறிக்கையினை அனுப்பி வைக்க வேண்டும். மேலும், வழக்கம் போல் பள்ளிகளுக்கு வந்து செல்லும் மாணாக்கர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்படி, சுற்றறிக்கையினை அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் தமது ஆளுகையின் கீழுள்ள அனைத்து கல்வி அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்கு அனுப்பி சுதந்திர தினவிழாவினை சிறப்பாக கொண்டாடி, அதற்கான அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்/
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்.

நகல்
அரசு முதன்மைச் செயலாளர்
பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்களுக்குத் தகவலுக்காகப்
பணிந்தனுப்பப்படுகிறது.